بسم الله الرحمن الرحيم



# FRIDAY SERMON

12 APRIL 2019

(05 SHABAAN 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM**

## WHICH JIHAD ?

## எது ஜிஹாத் ?

TAMIL VERSION / தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

ஜிஹாத் என்பது மதத்தொடர்பான ஒரு கடமையாகிறது, அது நம்பிக்கையில் ஊன்றிய ஒரு செயலாகிறது. மட்டுமின்றி அது ஒவ்வொரு முஸ்லீம்களுக்கும் திருக் குர்-ஆன் பரிந்துரைத்த ஒன்றாகிறது. ஆனால் அற்புதம் எனலாம்! இஸ்லாமிய போதனைகள் ஒரு புறம் மிகத்தெளிவாக இருந்திருந்தும் சிறுபான்மையான முஸ்லீம்களுக்கு மட்டுமே அதைப்பற்றிய சரியான அறிவு உள்ளது மறுபுறம், முஸ்லீம்களல்லாதவர்கள் அதைப்பற்றி ஆட்சேபனை

செய்கின்றனர். அதன் விளைவாக இஸ்லாமைப்பற்றிய பல தவறான கருத்துக்கள் மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளது.

முஸ்லீம்களில் பெரும்பான்மையானவர்கள் தங்கள் சுயநலனுக்காக, எந்தவொரும் போராட்டமனாலும் சரி அதை மறைத்துக்கொள்வதற்கும் எந்தவொரு பிரச்சினை ஆனாலும் சரி அதற்கு தீர்வு காண்பதற்கும் ஜிஹாத் என்ற வார்த்தையை பயன்படுத்துவதை நியாயமாகவும் வசதியாகவும் எண்ணுகின்றனர். எனவே எல்லா நிலைகளிலும் தவறானவை கூட மிகவும் நல்லது என்று அவர்களுக்கு தோன்றுகிறது.

நீண்டகாலமாக, முஸ்லீம் அல்லாதவர்கள் ஜிஹாத் என்றால் இஸ்லாத்தை பரப்புவதற்காக இஸ்லாமியரல்லாத மக்களுக்கு எதிராக செய்யும் புனிதபோர் என்று தவறாக புரிந்திருக்கின்றனர். ஆகவே ஜிஹாத் குறித்த இந்த தொடர் குத்து.ஃ.பாக்கள் வழியாக பயங்கரவாதம் மற்றும் இஸ்லாமோபோபியாவை (இஸ்லாத்தின் மீது வெறுப்பு மற்றும் ஒருவகைப்பட்ட அச்சமுடையவர்கள்) குறித்து ஏற்கனவே விளக்கமளித்திருந்ததால் தற்போது நான் இஸ்லாமின் ஆரம்ப கட்டத்திற்கு திரும்பி திருக்குர்-ஆனிய போதனைகள் மற்றும் திருநபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளை அடிப்படையாக்கிக்கொண்டு உண்மையில் ஜிஹாத் என்றால் என்ன என்பதைக் குறித்து விவரிப்பது மிக நன்கு என்று எண்ணுகிறேன்.

ஜிஹாத் என்ற வார்த்தை ஜுஹ்த் என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. "தீவிர முயற்சியில் ஈடுபடுதல்" என்பது அதன் பொருளாகும் (அல் அன்கபூத் - 29:7) முஸ்லிம்களை பொறுத்தவரையில், ஜிஹாத் என்பது அவர்களுக்கு ஒரு முக்கியமான கட்டளையாகும். திருக்குர் ஆனின் 36-க்கு குறையாத சந்தர்ப்பங்களில் அவ்வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் நம்பிக்கையாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட விசுவாசச் செயல்கள் அனைத்தும் அதாவது பிரார்த்தனை, நோன்பு நோற்பு, ஜகாத் மற்றும் புனிதயாத்திரை போன்றவை அனைத்தும் ஒரு தனி நபரின் பலவீனங்களை வெல்வதற்கு வடிவமைக்கப்பட்ட ஆன்மீக பயிற்சி முறைகளாகிறது. அத்தகைய பயிற்சி முறைகள், ஜிஹாதை நிறைவேற்றுவதற்கு அந்நபரை ஆயத்தமாகிறது.

ஜிஹாத், அதாவது திருக்குர் ஆனில் மூன்று வகையான போராட்டங்களைப் பற்றி குறிப்பிட்டிருப்பதை பார்க்கலாம்.

1. **தனது நப்சுக்கு எதிரான போராட்டம்.**
2. **அனைத்து வகையான தீமைகளுக்கு எதிரான போராட்டம்**
3. **பகைவர்களின் படைகளுக்கு எதிரானான போராட்டம்**

இந்த மூன்று வகையான ஜிஹாத்தை கீழே கூறப்பட்ட முறையில் நமக்கு வேறுபடுத்தலாம்

1. **ஜிஹாதி அக்பர் (மிக பெரிய ஜிஹாத்)**
2. **ஜிஹாதி கபீர் (பெரிய ஜிஹாத்)**
3. **ஜிஹாதி சஹீர் (சிறிய ஜிஹாத்)**

இஸ்லாத்தின் புனித தீர்க்கதரிசி அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஹாத் அக்பரை அதாவது மிக பெரிய ஜிஹாதை உயர்ந்ததும் மகத்துவமிக்கதுமான போராட்டம் என்று கருதினார். தபூக் போர் முடிந்து தனது படைகளுடன் திரும்பிவரும் பயணத்தின் போது அன்னார் கூறினார். **“சிறிய ஜிஹாத்தை நீங்கள் இப்போது நிறைவேற்றியுள்ளீர்கள் ஆனால் மிக பெரிய ஜிஹாத் எஞ்சுகிறது”**

## JIHAD-I -AKBAR

## ஜிஹாதி அக்பர் / மிக பெரிய ஜிஹாத்

ஒருவர் தனது தீயதான போக்குகள் மற்றும் விருப்பங்களுக்கு எதிராக அயராத நிலையில் போராட்டத்தை மேற்கொள்வதை ஜிஹாதி அக்பர் எனலாம். இது ஒரு இராஜ்ஜியத்திற்காக செய்யும் (இராஜியம், அரசாங்கம், குறிப்பாக இஸ்லாமிய நாடு) போராட்டமல்ல. மாறாக இது, ஒருவர் தனது பலவீனமான உள்ளுணர்வுகளுக்கு எதிராக, உடல் விருப்பங்களுக்கு எதிராக, விபசாரத்திற்கு எதிராக, பொய், நேர்மையின்மை மற்றும் லௌகீக நோக்கங்களுக்கு எதிராக மேற்கொள்ளும் போராட்டமாகிறது. இவ்வாறாயினும் இந்த போராட்டத்தில்

குடிமகனுக்கு உதவவேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. ஒருவரின் உள் சுத்திகரிப்புக்கு உகந்த நிலைமைகளை உருவாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகிறது. ஒரு நபரின் உள்சுத்திகரிப்பின் பாதையில் தடங்கல் விளைவிக்கும் சமூக சூழலை அகற்றுவது அரசின் கடமையாகும். உதாரணமாக, மதுபானங்களின் விற்பனை, போதை மருந்துகள் விற்பனை, அதிர்ஷ்ட விளையாட்டுகள், நடத்தைக்கெட்ட செயல்கள் ஆகியவற்றை அகற்ற வேண்டியது அரசின் பெறுப்பாகும்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் **"தூய்மை நம்பிக்கையின் பகுதியாகிறது".** இந்த "தூய்மை என்பது ஆன்மாவின் தூய்மையைக் குறிக்கிறது. எனது பகுப்பாய்வுபடி, ஆரோக்கியமற்ற ஆசைகளால் சூழ்ந்திருக்கும் ஒரு ஆன்மா ஒருபோதும் இறையருளை பெறுவதில்லை. ஏனெனில் அத்தகைய ஆன்மாக்களில் இறையருள் நுழைவதை அவர்களின் அந்த ஆரோக்கியமற்ற விருப்பங்கள் தடுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு மோசமான செயல் மற்றும் தூண்டல்களுக்கு எதிராக போராட்டத்தை மேற்கொண்டு தனது ஆன்மாவை ஒருவர் தூய்மைப்படுத்துவதன் மூலம் அவர் இந்த மிக உயர்ந்த ஜிஹாதை நிறைவேற்றுகிறார். அந்நிலையில் அவர் தனது படைப்பாளனின் அருளை பெறுவதற்கும், ஆன்மீக முன்னேற்றத்தின் பாதையைப் பின்பற்றுவதற்கும் தகுதிபெற்றவராக இருப்பதன் மூலம் அவர் ஈமானின் அரைப் பகுதியை அடைகிறது.

## JIHAD-I-KABIR

## ஜிஹாதி கபீர் / பெரிய ஜிஹாத்

ஆரோக்கியமற்றதும் தீங்கு விளைவிப்பதும் மற்றும் ஒருவருக்கு அநீதியிழைப்பதுமான எல்லாவற்றிற்கும் எதிரான போராட்டத்தை ஜிஹாதி கபீர் அதாவது உயர்ந்த ஜிஹாத் எனலாம். இந்த ஜிஹாதில் ஈடுபட அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் உத்தரவிடப்பட்டதாக காணலாம்.

**“நபியே! நிராகரிப்பவர்களுடனும், நயவஞ்சகர்களுடனும் அறபோர் நிகழ்த்துவீராக மேலும் அவர்களுக்கு எதிரில் கடுமையாக இருங்கள்”**.(9:73).

இந்த வசனம் ஜிஹாதுக்கு ஒரு தெளிவான கட்டளையாகும். ஆனால் ஆயுதம் எடுப்பதை இங்கு குறிப்பிடவில்லை. திருநபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக, மக்காவை சார்ந்த அவநம்பிக்கையாளர்களுக்கு எதிராக தற்காப்பு போர்களில் ஈடுபட்டார். ஆனால் மதினாவை சார்ந்த நயவஞ்சகர்களுக்கு எதிராக அவர் ஒருபோதும் ஆயுதங்களை எடுக்கவில்லை. உஹத் போரின்போது தங்களை காட்டிக் கொடுத்த பிறருக்கு எதிராக கூட அவர் ஆயுதங்களை பயன்படுத்தவில்லை. எனவே நான் இப்போது குறிப்பிட்ட ஜிஹாத் ஆயுதங்களை பயன்படுத்தி செய்ய வேண்டிய ஜிஹாத் அல்ல என்பது தெளிவாகிறது. **“ஆகவே நீர் இந்த நீராகரிப்போர்களுக்கு வழிபடாதீர் அதன் மூலம் (குர்-ஆன்) அவர்களுடன் பெரும் போராட்டத்தை (ஜிஹாத்) மேற்கொள்வீராக”** (25:53)

இந்த வசனம் வாயிலாக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மிக சக்தி வாய்ந்த ஆயுதமான குர்-ஆனை கொண்டு போராட கட்டைளையிடப்பட்டுள்ளது. அதாவது அல்லாஹ்வின் வார்த்தைகளைக் கொண்டு போராட்டத்தை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இது ஜிஹாதி கபீரின் உண்மையான நோக்கத்தை நிரூபிக்கிறது. இது ஒரு உன்னத போராட்டமாகிறது. திருக் குர்-ஆனிய போதனைகளின் அழகை விளக்கி மக்களை இஸ்லாமிற்கு அழைப்பதற்கு தேவைப்படுகிறது. தனிபட்டமுறையில் இது ஒரு போராட்டம்தான், ஆனால் ஜிஹாதி அக்பர் என்னும் போராட்டத்தை அதாவது சுய நப்ஸுக்கு எதிரான போராட்டத்தை நிறைவேற்றாமல், இந்த போராட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற ஒருபோதும் இயலாது.

தற்செயலாக, ஒரு தவறான நம்பிக்கை பரவலாகி விட்டது அதாவது இஸ்லாமை பரப்புவதற்கு ஆயுதங்களை பயன்படுத்தினார்கள் என்ற ஒரு தவறான நம்பிக்கை முஸ்லீமகள் அல்லாதவர்களிடையே பரவலாகிவிட்டது. ஆனால் ஆற்றல் மற்றும் நம்பிக்கைக்குரிய வாதங்களால் அதன் உண்மையை நீரூபிக்கும் வகையில் இஸ்லாம் அமைந்துள்ளது. பலம் மற்றும் வற்புறுத்தல்களைக் கொண்டு அதனை பிரச்சாரம் செய்யப்பட வேண்டும் என்று நினைப்பது முட்டாள்தனமாகும். அதுமட்டுமின்றி மேலும் திருக்குர் ஆனிய போதனைகள் வழிபாட்டு சுதந்திரத்தை உறுதிப்படுத்துகிறது.

**"மார்க்கத்தில் எந்தவிதமான கட்டாயவுமில்லை"** (2:257)

## JIHAD-I-SAGIR

## ஜிஹாதி சஹீர் / சிறிய ஜிஹாத்

இது சிறிய ஜிஹாத் ஆகிறது. இது முக்கிமாக அரசைப்பற்றியதாகும். அல்லாஹ் திருக் குர் - ஆனில் கூறுகிறான்.

**"எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்"** (22:40)

**"எங்களின் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது"** (22:41)

முஸ்லீம்களுக்கு தங்கள் தற்காப்பிற்காக ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்ட முதல் வசனம் சூரத்துல் அல்-ஹஜ்ஜில் 40 – வது வசனம் என்று விமர்சகர்கள் மத்தியில் ஒருமித்த கருத்து உள்ளது. இது திருநபி (ஸல்) அவர்கள் மெக்காவிலிருந்து மதீனாவுக்கு குடிபெயர்ந்ததைத் தொடர்ந்து இறக்கப்பட்ட வசனமாகிறது. 41 – வது வசனம் இந்த கருத்துகளை ஆதரிக்கிறது. அதாவது முஸ்லீம்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட பிறகுதான் போராட அனுமதி வழங்கப்பட்டது என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

40- வது வசனம் ஒரு தற்காப்பு போரினை நடத்திக்கொள்ளலாம் என்ற கொள்கையை முன்வைக்கிறது. இந்த கொள்கையின் அடிப்படையில், ஆயுதங்கள் ஏந்திய மெக்கன் இராணுவத்துடன் போராட அவர்களுக்கு அனுமதி

அளிக்கப்பட்டது. ஏனென்றால் அவர்கள் நியாயமற்ற முறையில் துன்புறுத்தப்பட்டனர், தாக்கப்பட்டனர்.

41 – வது வசனம் அவர்கள் ஆயுதங்களை எடுக்க அனுமதிக்கப்பட்டதன் இரண்டாவது காரணத்தை அளிக்கிறது. அவர்கள் அநியாயமாக தங்கள் வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர், அவர்களுடைய ஒரேயொரு தவறு என்பது அவர்களின் நம்பிக்கை எதிராளிகளின் நம்பிக்கைக்கு மாறாக இருந்தது. அந்த நம்பிக்கையின் பெயரில் அவர்கள் துன்புறுத்தல் மற்றும் சித்தரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். மூன்றாவது வசனமானது, வழிபாடு மற்றும் கருத்து சுதந்திரத்தை மீட்டெடுக்க தொடர்ந்து போராட முஸ்லீம்களுக்கு அனுமதியளிக்கிறது.

**"கலகம் இல்லாதொழிந்து மார்க்கமென்பது அல்லாஹ்விற்குரியதாகவே ஆகும் வரையிலும் நீங்கள் அவர்களுடன் போர் செய்யுங்கள்"** (2:194)

சுருக்கமாக கூறினால் மிக பெரிய ஜிஹாத் என்பது ஒரு மனிதனை, அல்லாஹ் தேர்ந்தெடுத்த ஒருவரைப்போன்று உருமாற்றம் செய்யும் ஒன்றாகும். பெரிய ஜிஹாத் என்பது சக மனிதர்களிடம் அன்பாக நடந்துக் கொள்வதற்கும், அவர்களை இல்லாஹ்வின் வழியில் அழைப்பதற்கும் அவருக்கு வழிவகுக்கிறது. சிறிய ஜிஹாத் என்பது அவரது சொத்து உரிமைகள் மற்றும் சுதந்திரத்தினை பாதுகாப்பதற்கு அனுமதிக்கிறது. மிகவும் உன்னதமான போராட்டம் என்பது தனது தாழ்ந்த உள்ளுணர்வுகளுக்கு எதிராக போராடுவதும், அல்லாஹ்வின் வசனங்களை உலகில் பரப்புவதும் ஆகும். அதை போன்றே தீவிர அவசரகால சூழ்நிலைகளில் தற்காப்புக்காக போராடுவதையும், ஆயுதம்மேந்தி போராடுவதையும் ஜிஹாதி சாஹீர் அதாவது சிறிய ஜிஹாத் என்று அழைக்கப்படுகிறது.

நம் சொத்து, நமது நாடு மற்றும் வழிபாட்டு சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு மட்டும்தான் இஸ்லாம் ஆயுதம் ஏந்தி போராடுவதற்கு அனுமதிக்கிறது. வேறு எதுவும் இல்லை. வேறு எந்த போர்களும் பொறுக்கதக்கதல்ல. இந்நிலையில் வன்முறையை ஆதரிக்கும் ஒரு மதமாக இஸ்லாத்தை விதிக்க முடியுமா? இஸ்லாமிய போதனைகள் என்ன என்பதற்கும், இஸ்லாமியவாதிகள் இப்போது கடைப்பிடிப்பது என்ன என்பதற்கும் இடையில் ஒரு வேறுபாட்டை உருவாக்க

வேண்டியது அவசியம் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண்டு உண்மைகள் ஆகிறது. இது இன்னொரு கேள்வியை நம்முன் வரவழைக்கிறது. **அவ்வப்போது நிகழ்ந்துவரும் போலி ஜிஹாத், இஸ்லாமிய போதனையின் அளவுருக்களுக்கு பொருந்துமா? ஈரானுக்கு எதிரான ஈராக்கின் ஆக்கிரமிப்பு ஒடுக்கு முறைகளுக்கு எதிரான தற்காப்பு நோக்கத்தைக் கொண்டிருந்ததா?**

எனது தாழ்மையான கருத்துகள் படி, பாலஸ்தீன், போஸ்னிய, கொஸோவோ, மியாமர் முஸ்லீம்கள், ரோஹின் முஸ்லீம்கள் ஆகியவர்கள் இன்று மேற்கொண்டுவரும் போரட்டம் மட்டுமே இன்றைய நிலையில் ஜிஹாத் என கூறமுடியும். ஏனெனில் அவர்கள் வீடுகளிலிருந்தும், நாடுகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளனர். துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். எனவே நம்பிக்கையின் காரணமாக ஒடுக்கப்படும் அனைத்து முஸ்லீம்களுக்கும், தங்கள் வாழ்கையையும், உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாக்க ஜிஹாதி சாஹீர் செய்ய அனுமதி உண்டு. இந்த உலகில், காராடிஸ்க் மற்றும் மிலோசிவிக் (முன்னாள் செர்பியா இராணுவ அதிபதி, செர்பியா முன்னாள் ஜனாதிபதி) போன்றவர்களிடம் ஆயுதங்கள்கொண்டல்லாமல் பேச்சுவார்த்தைகளால் எதையும் சாதிக்க முடியாது. மீண்டும் ஒரு உண்மையைக் கூறுகிறேன். இஸ்லாமிய உள்ளமைவில் புனித போரில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்க வேண்டியது அவசியமாகிறது. அதற்கான அனுமதியை வழங்க வேண்டியது உன்னதமான ஒரு அதிகாரியாக இருக்கவேண்டும், இந்த அதிகாரி, உண்மையில் அல்லாஹ்வின் தூதரைத்தவிர வேறு எவராகவும் இருக்கமுடியாது. (இறை அறிவிப்பின் படி அதற்கான அனுமதி அளிக்கப்படுகிறது) அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையவும், குலபா உர்ராஷித்தீங்களுடையவும் அனுமதியின்றி புனித போர் செய்ததாக ஒரு இஸ்லாமிய நம்பிக்கையாளருக்கு நம்பிக்கைகொள்ள இயலுமா?

அல்லாஹ்வின் ஒரு தூதர் இல்லாமல் இஸ்லாமிய உலகம் அதன் பாதிவழியில் மட்டுமே செயல்பட முடியும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒன்று, உம்மத்தை வழிநடத்த வேண்டியது அல்லாஹ்வின் தூதராக இருக்கவேண்டும். நபிமார்களின் வருகையின் கதவு மூடப்படவில்லை என்றும் அண்ணல் நபிகள் நாயாகம் (ஸல்) அவர்களின் தீர்க்கதரிசனப்படி மார்க்கம் மற்றும் போதனைகளை சீரமைப்பதற்காக இறையடியார்கள் தோன்றுவார்கள்

என்றும் எல்லா முஸ்லீம்களிடமும் நம்பிக்கை இருக்கவேண்டும். காலத்தின் தேவையான கட்டளைகளை அத்தகைய இறைத்தூதர்கள் வழங்கவேண்டும் என்ற உண்மை ஏஞ்சுகிறது. ஆயுதங்களை பயன்படுத்தி செய்யும் போர் உட்பட பல காரியங்களுக்கும் அத்தகைய இறைத்தூதர்களின் அனுமதியில்லாமல் செய்வது தடைசெய்யப்பட்ட காரியம் என்பது இஸ்லாமிய கட்டமைப்பாகிறது. சிந்திக்க விரும்புவோர்கள் சிந்திப்பதற்காக நான் இதை சமர்பிக்கின்றோன்.

அல்லாஹ் முஸ்லீம்கள் மீதும் மனிதகுலத்தின் மீதும் கருணை காட்டுவததோடு, சிறந்த முறையில் அமைந்திருக்கும் இஸ்லாமிய தன்மையைப் புரிந்துக்கொள்ள நாம் அனைவருக்கும் உதவி புரியட்டும். மேலும் அல்லாஹ் நம்மை நம்பிக்கையில் ஊக்கப்படுத்தி, எப்போதும் நெறியான பாதையில் பயணம் மேற்கொள்வதற்கான வழிவகுத்தருளட்டும். ஆமீன்.

**Translated by:**

*Naib Amir Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY:


**SIRAJ DEENSAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832



**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**